**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**C.C.No.60/2022**

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **கருத்தராஜா** | தொழில் | : கட்டுமான வேலை |
| தகப்பனார் பெயர் | : அய்யாச்சாமி | கணவர் பெயர் | : ------ |
| கிராமம் | : பண்ணைக்காடு | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 34/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 22.05.2026 |

**(எதிரிகள் A2, A3 ஆஜரில் உள்ளனர், எதிரிகள் A1, A4 மனுவின்பேரில் ஆஜரில் இல்லை)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் பண்ணைக்காட்டில் வசித்து கட்டுமான வேலை செய்து வருகிறேன். வழக்கின் எதிரிகளைத் தெரியும், அவர்கள் எனது உறவினர்கள். தேதி நினைவில்லை. சுமார் 2–3 வருடங்களுக்கு முன்பு மாலை 07.00 மணியளவில் இருட்டுநேரத்தில் எனது வீட்டின் அருகே கூட்டமாக சண்டை போடும் சத்தம் கேட்டு அதை வேடிக்கை பார்க்கச் சென்றபோது கூட்டத்தில் இருந்த யாரோ ஒருவர் தாக்கி எனது தலையில் காயம் ஏற்பட்டது. என்னை தாக்கிய நபர்கள் யார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. காயமுற்ற நான் பண்ணைக்காடு அரசு மருத்துவமனைக்கு சென்று முதலுதவி சிகிச்சை எடுத்து, அதன் பிறகு தேனி கானாவிலக்கு அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டேன். சிகிச்சையில் இருந்தபோது அங்கு வந்த போலீசார் என்னிடம் எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் வாங்கிக்கொண்டனர். வழக்கு குறித்து எந்த

விபரமும் தெரியாது . போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

<u>**அரசு தரப்பில் மேற்கண்ட சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க நீதிமன்ற அனுமதியுடன் மேற்கண்ட சாட்சி அரசுத் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**</u>

கடந்த 30.03.2018 ம் தேதி இரவு 10.30 மணியளவில் கஸ்தூாரிபாய் புரத்தில் உள்ள எனது வீட்டருகே சென்று கொண்டிருந்தபோது வழக்கின் எதிரிகளான குழந்தைவேல் , வனராஜ், சதீஸ்குமார், முத்தரசன் ஆகியோர் முன்விரோதம் காரணமாக ஆபாசமாக பேசி அடித்து கீழே தள்ளி அவர்கள் வைத்திருந்த பீர் பாட்டிலைக் கொண்டு தலையில் காயம் ஏற்படுத்தினார்கள் என்றாலும், அதில் சுயநினைவை இழந்த நான் பண்ணைக்காடு அரசு மருத்துவனைக்கு முதலுதவி சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டு பிறகு திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டேன் என்றால் சரியல்ல . எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதால் எதிரிகளுக்கு ஆதரவாக, வழக்கிற்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.05.22 15:02:03 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.